FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | இந்து சமயம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி - I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

❖ **1 – 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களில் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு விடைத்தாளில் குறிப்பிடுக.**

01. 1. இந்திரன் 2. வருணன் 3. சிவன்
4. பூசன் 5. சோமன் ( )

02. 1. முண்டக 2. சாந்தேக்கிய 3. பிரகதாரணிய
4. பிரசன்ன 5. பௌஷ்டிகாணி ( )

03. 1. சாந்தோக்கிய 2. பிரகுதாரணிய 3. முண்டகோ
4. ஆயஸ்ஸாணி 5. பிரசன்ன ( )

04. 1. சைவசித்தாந்தபாணு 2. விவேகானந்தன் 3. சிவதொண்டன்
4. தமிழருவி 5. சைவக்காவலன் ( )

05. 1. கையேகி 2. சீதை 3. திரிசடை
4. குந்தி 5. சூர்ப்பனகை ( )

agaram.lk

❖ **6 – 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடிப் பெயரை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

06. 1. சிவாகமங்கள் - காமிகம்
2. வைணவம் - பாஞ்சராத்திரம்
3. சாக்த ஆகமம் - தந்திரங்கள்
4. காணயத்தியம் - வைகாசனம்
5. கௌமாரம் - குமாரதந்திரம் ( )

07. 1. சாங்கியம் - கபிலர்
2. கேவலாத்துவிதம் - சங்கரர்
3. துவைதம் - மத்துவர்
4. யோகம் - பதஞ்சலி
5. விசிட்டாத்வைதம் - வல்லபர். ( )

08. 1. சுந்தரர் - திருத்தொண்டர் தொகை
2. நம்பியாண்டார் நம்பி – திருத்தொண்டர் திருவந்தாதி
3. நம்மாழ்வார் - திருவிருத்தம்
4. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு
5. ஆண்டாள் - திருவாய்மொழி ( )

09. 1. உமாபதி சிவாச்சாரியார் - திருவருட்பயன்
2. காளிதாசர் - சாகுந்தலம்
3. இராஜேந்திர சோழன் - வானவன்மாதேவீஸ்வரம்
4. ஹரப்பா – சேர். ஜோன் மார்ஷல்
5. சிம்ம விஷ்ணு – மதுரை மீனாட்சியம்மன் ( )

10. 1. பிரகிருதி – சாங்கியம்
2. அவித்தை – வேதாந்தம்
3. ஆணவம் - சைவ சித்தாந்தம்
4. திவ்யதேசம் - வைணவம்
5. தருமபூத ஞானம் - பௌத்தம் ( )

❖ **11 – 15 வரையான வினாக்களில் 'அ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ளவை 'ஆ' நிரலில் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் பொருத்தமுடையவை. 'அ' நிரலில் உள்ளவற்றுடன் பொருத்தமாக ஒழுங்குபடுத்தும் போது ஐந்து சேர்மானங்களில் ஒன்று சரியானதாக அமையும் அதனை தெரிவு செய்து விடைத்தாளில் குறிப்பிடுக.**

11.

| அ | ஆ |
|---|---|
| 1. பூர்வ ஆர்ச்சிகம் | A. வியாசகர் |
| 2. வியாபார காண்டம் | B. மெய்கண்டதேவர் |
| 3. மகாபாரதம் | C. சாமவேதம் |
| 4. அற்புதத்திருவந்தாதி | D. தர்மசாஸ்திரம் |
| 5. சிவஞானபோதம் | E. காரைக்கால் அம்மையார். |

1. BACED 2. CBADE 3. CDAEB 4. EDCBA 5. ACBDE ( )

12.

| அ | ஆ |
|---|---|
| 1. மகேந்திரவர்மன் | A. சங்கரபக்தன் |
| 2. பரமேசுவரவர்மன் | B. சிவபாதசேகரன் |
| 3. 2ம் நரசிம்மவர்மன் | C. ஷேதகாரி |
| 4. 3ம் நரசிம்மவர்மன் | D. வித்தியாவிநீதன் |
| 5. சோழ அரசர் | E. ஜயடிகள் காடவர்கோன் |

1. ADECB 2. CDAEB 3. CDBEA 4. CEDAB 5. EDABC ( )

13.

| அ | ஆ |
|---|---|
| 1. ஜலசயனம் | A. ஓவியங்கள் |
| 2. வீணாதரன் | B. சிவானந்த நடனம் |
| 3. ஞானமிர்தம் | C. சபாபதி நாவலர் |
| 4. ஆனந்த குமாரசாமி | D. மாமல்லபுரகடற்கரைக் கோயில் |
| 5. ராஜ புத்திர | E. இராஜ சிம்மன் |

1. DCBAE 2. BADEC 3. ECDAB 4. CDBEA 5. DECBA ( )

14.

| அ | ஆ |
|---|---|
| 1. ஜயனார் | A. நேர்தல் |
| 2. காவடி | B. வாத்தியக் கருவி |
| 3. தப்பு | C. கலை வடிவம் |
| 4. வளர்ந்துநேரல் | D. வேண்டுதல் |
| 5. பரிகலம் அழைத்தல் | E. நாட்டார் தெய்வம் |

1. CBEDA 2. ECBDA 3. ABCDE 4. DECBA 5. CBADE ( )

15.

| அ | ஆ |
|---|---|
| 1. கோயிற் புராணம் | A. திருக்ணோச்சரம் |
| 2. சித்திரவேலாயுதர் காதல் | B. மகாவலி கங்கைக் கரையில் அமைந்த சிவன் |
| 3. நகுலமலைக் குறிஞ்சி | C. கீரிமலைச் சிவன் கோயில் |
| 4. திருக்கரசைப் புராணம் | D. வெருகல் முருகன் கோயில் |
| 5. தட்சணகைலாச புராணம் | E. சிதம்பரம் நடராசர் கோயில் |

1. CBDEA 2. ABCDE 3. BACDE 4. EDCBA 5. EDCAB ( )

agaram.lk

❖ ***16 – 20 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்புடன் பொருந்தாது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.***

16. சித்தாந்த முதல் நூலும் சார்பு நூலும்.
    1. சைவசித்தாந்தத்தின் முதல் நூல் சிவஞானபோதமாகும்.
    2. சைவசித்தாந்தம் பற்றிய கருத்தியலை முதன் முதலில் முன்மொழிந்த நூல் திருவுந்தியார் ஆகும்.
    3. சிவஞானபோதத்தின் ஆசிரியர் மெய்கண்டார் ஆவார்.
    4. சைவ சித்தாந்த அட்டகம் சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும்.
    5. சிவப்பிரகாசமே சைவசித்தாந்தத்தின் சார்பு நூல் எனச் சொல்வோரும் உள்ளார்.

17. உமாபதி சிவாசாரியார்.
    1. இவர் சிவஞானபோதம் என்னும் முதன் நூலுக்குச் சிவப்பிரகாசம் என்னும் வழிநூலை எழுதியவர்.
    2. தில்லைச் சிவனின் திருவருளால் பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுத்தார்.
    3. தில்லைக் கொற்றவன் குடியில் பிறந்தவர் தமிழ் வடமொழிகளில் வல்லவர்.
    4. இவர் திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம் முதலான நூல்களை எழுதியுள்ளார்.
    5. சித்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்களை எழுதி சைவசித்தாந்த உருவாக்கத்துக்குப் பணிபுரிந்தவர்.

18. இருக்கு வேதத்தின் முதன்மை.
    1. இந்திய இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்ட இலக்கியம் இருக்கு வேதமாகும்.
    2. வைதிக சமயங்களின் வழிபாட்டிற்குரிய தெய்வங்கள் பலவற்றின் இயல்புகளை வெளிப்படையாக முதன் முதலில் குறிப்பிட்ட நூலும் இதுவே.
    3. வேதங்கள் நான்கினுள் முதலில் வைத்து போற்றப்படும் வேதம் இருக்கு வேதமேயாகும்.
    4. இருக்கு வேதம் அதர்வவேதம் போன்று பொது மக்களுக்கு நன்மை தரும் மந்திரங்களையும் தீமை தரும் மந்திரங்களையும் பெரிதும் குறிப்பிடுகின்றது.
    5. “ரிதம்” எனப்பட்ட அண்டவியக்க முறைமைக்கும் படைப்புக்கும் வருணனே முதல்வன் என இவ்வேதம் குறிப்பிடுகின்றது.

19. இரண்டாம் சிவாலயம் - பொலன்னறுவை
    1. பொலன்னறுவையில் சோழர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்களுள் மிகச் சிறப்பு வாய்ந்த ஆலயம் இரண்டாம் சிவ தேவாலயம்.
    2. இவ்வாலயத்தினை வானவன் மாதேவிச்சரம் என்று அழைப்பர்.
    3. இவ்வாயலம் அதிட்டானம் முதல் விமானம் வரையுள்ள ஆலயத்திற்குரிய முழு வடிவமும் கொண்டது.
    4. இதன் வளாகத்தில் பிள்ளையார் கோவில் தனி ஆலயமாகக் காணப்படுகின்றது.
    5. வானவன் மாதேவிச்சரத்தின் அமைப்பும் அழகும் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் அழகிற்கும் அமைப்புக்கும் ஒப்பானது.

20. வழிபாட்டில் பெண்ணடியார்.
    1. அடியார்கள் அட்டாங்க நமஸ்காரம், தோப்புக்கரணம், பிரதட்டை செய்தும், காவடி எடுத்தல், தீச்சட்டி ஏந்தியும் தோத்திரம் பாடியும் இறைவனை வழிபாடு செய்வர்.
    2. பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டுமென்பது சைவமரபு.
    3. தலை, கைகள் இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புகளும் நிலத்தில் பொருந்தும்படி செய்யப்படும் வழிபாடே பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும்.
    4. பெண் அடியார்கள் பிரதட்டை செய்வது அவர்களின் உடலமைப்புக்கு ஒவ்வாத செயலாகும்.
    5. பெண் அடியார்கள் வன்பக்தியில் ஈடுபடுவது சாலச் சிறந்தது.

❖ ***21 – 25 வரையுள்ள வினாக்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டதொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் பொருத்தமான சேர்மானங்களைத் தெரிவு செய்து விடைத்தாளில் அதன் இலக்கத்தை குறிப்பிடுக.***

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>விமானம் | B<br>சுக்கீரநீதி | C<br>மகரசங்கிராந்தி | D<br>அர்த்தசாஸ்திரம் | C<br>ஆறுமுகநாவலர் |
| F<br>ஆடிவேல் விழா | G<br>உத்தராயணகாலம் | H<br>குமாராலயத் தீபம் | I<br>நித்திய கருமவீதி | J<br>சுற்றுமாளிகைகள் |

21. தைப்பொங்கல் பண்டிகையுடன் தொடர்புபடுவது,

1. CG 2. CI 3. CH 4. IG 5. GF

22. இலங்கையில் கி.பி 19ம் நூற்றாண்டில் நிலவிய சைவ சமயத்துடன் தொடர்புபடுபவை.

1. JE 2. FE 3. EI 4. HJ 5. EF

23. கௌமார சமயக் கோட்பாடுகளுடன் தொடர்புபடும் விடயம்.

1. HA 2. FC 3. JF 4. FH 5. HC

24. இந்துக்களின் சமய ஒழுக்காற்றையும் சமூக நீதியையும் ஒழுங்குபடுத்தும் நூல்களைக் குறிக்கும் எழுத்துக்கள்.

1. DG 2. BD 3. IB 4. DI 5. BA

25. சோழர் காலக் கலை வரலாற்றுடன் தொடர்புபடக் கூடியவை.

1. JF 2. AD 3. BJ 4. AH 5. AJ

❖ **சைவசமயத்தின் வளர்ச்சிப் பின்னணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 26 – 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானங்களைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

நாவலர் சைவசமயத் தொண்டர். அவர் சைவசமய வளர்ச்சியின் பொருட்டுப் பல்துறைப் பணிகளை ஆற்றியுள்ளார். அவற்றுள் சில பின்வருமாறு,

A. ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் சைவப் பிரகாச வித்தியசாலைகளை நிறுவினார்.

B. சமய உண்மைகளைப் புரிந்து கொள்ளும் வகையில் சமய சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும் சுப்பிரபோதம் சைவதூஷண பரிகாரம் முதலான நூல்களை எழுதி வெளியிட்டவர்.

C. சமய ஒழுகலாறின் பொருட்டு நிலையாமை பிறர்மனை நிலையாமை முதலான விடயங்கள் பற்றித் தமிழில் பிரசங்கம் செய்தவர்.

D. தமிழ்மொழியில் கலைத்திட்டத்தை உருவாக்கியும் பல பாடங்கள் முதலான நூல்களை எழுதியும் நன்னூல் விருத்தியுரை முதலான நூல்களைப் பதித்தும் வெளியிட்டவர்.

E. சமூகத்தின் பொருளாதார விருத்தி கருதி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு வேளாண்மைச் சங்கம் நிறுவியும் கோதாரி நோய் ஏற்பட்ட பொழுது சமூக வேறுபாடு கருதாது கஞ்சித் தொட்டி தர்மமும் செய்தவர்.

F. இறைவனுக்கு பிருதியுடைய அருட்பாக்கள் அடங்கிள திருவருட்பா திரட்டு அருள்பா பதினாறாம் திருமுறை முதலான நூல்களைப் பதிப்பித்தவர்.

26. நாவலரின் சமயப் பணிகளுக்குப் பொருத்தமான சேர்மானத்தின் இலக்கத்தைத் தருக.

1. AB 2. CD 3. CF 4. DE 5. EF

27. நாவலரின் கல்விப் பணிகளை விளக்கி நிற்கும் பொருத்தமான சேர்மானத்தின் இலக்கத்தை குறிப்பிடுக.

1. AC 2. AD 3. CD 4. DE 5. EF

28. நாவலரின் சமூகநோக்கை எடுத்துக்காட்டும் பொருத்தமான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவு செய்க.

1. AB 2. BE 3. CF 4. DF 5. EF

agaram.lk

நாட்டார் தெய்வ வழிபாடும் கலைகளும்.

A. இயற்கைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை களிப்படையச் செய்யும் கலைகள் நாட்டார் கலைகள் எனலாம்.

B. நாட்டார் கலைகளில் கும்மி, கோலாட்டம், காவடி, கூத்து என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

C. நாட்டார் கலைகள் சமயம் சமூகம் தொழில்சார் கலைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

D. நாட்டார் கலைகளில் தப்பு, பறை, உடுக்கு, சல்லாரி போன்ற இசைக்கருவிகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

E. நாட்டார் தெய்வ வழிபாட்டின் நோக்கங்களாக துன்பம் நீங்கும் நாட்டுச் செழிப்பு, நோய் நீக்கம் என்பன காணப்படுகின்றன.

F. நாட்டார் கலைகள் ஆகமம் சாரா சிற்ப சாஸ்திர ஆகம விதிகளுக்கு அமைவாக ஆலயங்களில் நிகழ்த்தப்படுகிறது.

G. நாட்டார் கலைகள் கிராம மக்களது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து தெய்வீக வழிபாட்டுடன் இணைந்து இருப்பதுடன் அழகியல் உணர்வையும் மையமாகக் கொண்டுள்ளன.

H. ஊர் மக்களின் நன்மை கருதி நாட்டார் தெய்வ வழிபாட்டில் மடை பரவுதல், ஊர்க்காவல் பண்ணுதல், குளிர்த்தி ஆடல், கல்யாணக் கால் வெட்டுதல் போன்ற சடங்குகள் நடைபெறுகின்றன.

29. நாட்டார் தெய்வ வழிபாட்டின் கலைகள் தொடர்பான சேர்மானம்.
1. AHC  2. BDG  3. HAC  4. FAE  5. BHD

30. நாட்டார் தெய்வ வழிபாட்டின் பயன்களை விளக்கி நிற்கும் சேர்மானம்.
1. BCA  2. EGD  3. DCA  4. AEH  5. AFD

agaram.lk

❖ **31 – 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

31. ஆகம சிற்பசாத்திர நெறிசாராது வழிபடும் தெய்வங்களின் பரத்துவம் பற்றிய கருத்தியல்.
1. நாட்டுப்புற மக்கள் தாம் வழிபடும் தெய்வங்கள் பல நன்மைகளைத் தருபவையெனக் கருதுதல்.
2. அம்மக்கள் தாம் வணங்கும் தெய்வங்களைக் கண்கண்ட தெய்வங்களாக கருதி வழிபடல்.
3. அத்தெய்வங்கள் விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் உறைபவை.
4. அத்தெய்வங்களின் இருப்பு, பரத்துவம் பற்றியக் கருத்துகளும் அவை பெருந்தெய்வங்களுக்கு ஒப்பானவையெனக் கருதுதல்.
5. அம்மக்கள் அத்தெய்வங்கள் தமது சடங்குகளையும் நேர்த்திகளையும் ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் கொண்டவையெனக் கருதுதல்.

32. காவடியும் பக்தியும்
1. இறைவன் வழிபடுத்தற்குரிய முறைகளுள் காவடியும் ஒன்று.
2. காவடி முருகனுக்குப் பிடித்த ஆடற்கலைகளுள் ஒன்று.
3. ஆன்மீக நாட்டத்தையும் பக்தி வைராக்கியத்தையும் வளர்க்கும் சாதனங்களுள் காவடியும் ஒன்று.
4. காவடி வன் பக்தியையும் மென் பக்தியையும் வெளிப்படுத்தும்
5. பாற்காவடி மென் பக்திக்கு பறவைக் காவடி வன் பக்திக்கும் உரியது.

33. ஆகமும் அதன் தாற்பரியமும்.

1. ஆகமங்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டன.
2. ஆகமங்கள் கோயிற் கட்டக்கலையையும் கிரியைகளையும் விபரித்துக் கூறுவன.
3. ஆலயக் கற்பக்கிரகம் கருங்கல்லாலும் மூலமூர்த்தி அசல மூர்த்தியாகவும் வேண்டுமெனச் சிறப்பித்துக் குறிப்பிடும்.
4. ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உலகியல், ஆன்மீகம், ஞானம் என்னும் துறைகளை விளக்கி நிற்கின்றன.
5. ஆகமம் என்பதற்குத் தொன்றுதொட்டு வரும் அறிவு எனவும் பொருள் கொள்வர்.

34. அவத்தையும் ஆணவமும்

1. வேதாந்தம் சிவாத்துமாவின் இன்பதுன்பங்களுக்கு அடிப்படை காரணம் அவத்தையே எனக் குறிப்பிடுகின்றது.
2. சைவசித்தாந்தம் ஆன்மாவின் வினைப் பயன்களுக்கு அடிப்படையாக அமைவது ஆணவம் என்கின்றது.
3. வேதாந்திகள் சிவாத்துமாக்களின் ஆன்ம விடுதலைக்குத் தடையாக இருப்பது அவத்தையே என்பர்.
4. சித்தாந்திகள் ஆணவம் ஆன்மாவோடு அத்துவிதப்பட்டிருப்பது ஆன்மாவின் விடுதலைக்குத் தடை என்பர்.
5. வேதாந்த சித்தாந்த, கொள்கைகளின் அடிப்படையில் அவத்தையும் ஆணவமும் பெரிதும் ஒத்திருக்கும்.

35. அத்வைத வேதாந்தத்தின் பிதாமகர்.

1. அஜாத வாதத்தைத் தோற்றுவித்தவர் கௌடபாதர் என்பர்.
2. அவர் காரண காரியத் தொடர்பு பொருளற்றது என்பார்.
3. கௌடபாதர் ஆன்மா ஒன்றே உண்மைப்பொருள் என்பார்.
4. அஜாத வாதத்தின் மேலே கட்டியெழுப்பப்பட்டதே சங்கரரின் வேதாந்தமாகும்.
5. உலகம் இருப்பதுமில்லை உருவாக்கப்படுவதுமில்லை அது பொய் என்பார்.

❖ **36 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

agaram.lk

36. வைரவ விரதங்களில் ஒன்று.

1. சிவராத்திரி 2. நவராத்திரி 3. சித்திரைப்பரணி
4. ஏகாதசி 5. பிரதோசம்

37. 19ம் நூற்றாண்டில் வெளிவந்த சைவசமய பத்திரிகை சார்ந்த தொகுதி?

1. இலங்கை நேசன் தினகரன் விஞ்ஞானவர்த்தினி
2. விஞ்ஞானவர்த்தினி, ஈழநாடு, தினகரன்
3. வீரகேசரி, தினகரன், உதயபானு
4. இந்து சாசனம், இலங்கை நேசன், சைவ உதயபானு
5. உதயன், வலம்புரி, இந்துசாசனம்

38. பஞ்சலோகத்தில் முதன் முதலில் படிமக்கலை வளர்க்கப்பட்ட காலம்.

1. சங்ககாலம் 2. பல்லவர்காலம் 3. சோழர்காலம்
4. நாயக்கர் காலம் 5. சங்கமருவிய காலம்

39. சித்தாந்த சாத்திரங்களில் மிகக் குறைந்த வெண்பாக்களால் அமைந்த நூல்.

1. உண்மை விளக்கம் 2. சிவஞானசித்தியார் 3. சிவஞானபோதம்
4. கொடிக்கவி 5. சிவப்பிரகாசம்

40. கல்வெட்டுக்களில் உள்ள "ஸ்வஸ் ஸ்ரீ" என்பது குறிக்கும் பொருள்.

1. கீர்த்தி உண்டாகுக. 2. நீடூழி வாழ்க 3. மங்களமுண்டாகுக.
4. இன்பம் பொங்குக 5. ஆனந்தம் பெருகுக.

41. சாக்த ஆகமங்களில் ஒன்றாகக் கருதப்படுவது.
   1. காமிகம்  2. வைகாசனம்  3. குமாரதந்திரம்
   4. ஈஸ்வர சங்கிதை  5. மகா நிருவாண தந்திரம்

42. வைணவ ஆலயங்களுக்கு சொந்தமான நிலங்கள்.
   1. தேவதானம்  2. சதுர்வேதிமங்கலம்  3. திருவிடையாட்டம்.
   4. கிருஷ்ண மங்கலம்  5. திருமுக்கூடல்

43. ஸ்ரீசடகோபர் என்னும் பிள்ளைத் திருநாமத்தையுடைய ஆழ்வார்.
   1. பூதத்தாழ்வார்  2. பெரியாழ்வார்  3. ஆண்டாள்
   4. திருப்பாணழ்வார்  5. நம்மாழ்வார்

44. குடக்கூத்து என்ற கலை பற்றிக் கூறும் இலக்கியம்.
   1. திருக்குறள்  2. மகாபாரதம்  3. சிலப்பதிகாரம்
   4. மணிமேகலை  5. இராமாயணம்.

45. சாங்கிய சூத்திரத்தை எழுதியவர்.
   1. கணாதர்  2. பிரசத்தபாதர்  3. உதயணர்  4. கபிலர்  5. சிறிகரர்

46. ஆரியாசதகம் என்ற நூலை எழுதியவர்.
   1. சங்கரர்  2. கோவிந்தர்  3. கௌடபாதர்  4. இராமானுஜர்  5. மத்துவர்

47. ஆணவத்துக்குள்ள எட்டு குணங்களில் எப்போது துக்கப்படல் எனப் பொருள் தரும் குணம்.
   1. நகை  2. அஞர்  3. மதம்  4. கொலை  5. மோகம்

48. கஜபாகு மன்னன் முதன்முதலாக கண்ணிக்கு கோயில் கட்டிய இடமாகக் கருதப்படுவது,
   1. சுருவில  2. முல்லைத்தீவு  3. அங்கநாமக கடவை
   4. பருத்தித்துறை  5. மட்டுவில்

agaram.lk

49. மாசிமாத கிருஷ்ணபட்ஷ (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் அனுட்டிக்கும் விரதம்.
   1. சக்தி விரதம்  2. விநாயகர் விரதம்  3. முருக விரதம்
   4. சிவ விரதம்  5. விஷ்ணு விரதம்

50. உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு குறிப்பாக வீட்டில் உள்ள உயிரினங்களின் பொருட்டு செய்யப்படுவது,
   1. பூதயக்ஞம்  2. பிரமயக்ஞம்  3. தேவயக்ஞம்
   4. பிதிர்யக்ஞம்  5. மானிடயக்ஞம்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, மார்ச்- 2018
# Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | இந்து சமயம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - II

- ❖ பகுதி 'அ' இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும்
- ❖ பகுதி 'ஆ' இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – 'அ'

1) "சமயச் சடங்குகள் புனிதம் வாய்ந்தவையாகவும் பக்தியை வளர்க்கும் சாதனமாகவும் அமைகின்றன. அவற்றுள் விரதங்கள் முக்கியமானவை"

   i. தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் காலத்தைக் குறிப்பிடுக? தைப்பொங்கல் பண்டிகை வேறு எவ்வாறு அழைக்கப்படும்?

   ii. தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் முறையைச் சுருக்கமாகத் தருக?

   iii. தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் நோக்கம் பயன் என்பவற்றைக் குறிப்பிடுக

[2+10+8=20 புள்ளிகள்]

2) "இந்து தத்துவ மரபில் சங்கரரதும் இராமனுஜரதும் கோட்பாடு தொடர்பாக மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க".

   i. தத்துவக் கோட்பாட்டை நிறுவப் பயன்படுத்தப்படும் மூலாதாரங்கள்?

   ii. மூலப்பொருள் பற்றிய கருத்து.

   iii. உலகம்

   iv. ஆன்ம இலட்சியம் நிறைவேற கூறப்படும் வழிமுறைகள்

[3+8+5+4=20 புள்ளிகள்]

3) "இந்திய மண்ணில் செல்வாக்குப்பெற்ற சமயப் பிரிவுகளுள் ஒன்று சாக்தம் ஆகும். அதனை பின்வரும் தலைப்புகளில் ஆராய்க".

   i. சாக்தசமயம் சார்ந்த நூல்கள்

   ii. சாக்தசமயத்தின் தோற்றம் வளர்ச்சி

   iii. வழிபாட்டு முறை

   iv. தற்காலத்தில் சாக்தசமயத்தின் நிலை.

[3+6+5+6=20 புள்ளிகள்]

4) திராவிட கோயிற் கட்டக்கலை வளர்ச்சியில் பல்லவர் கட்டக்கலை பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க?

[20 புள்ளிகள்]

agaram.lk

## பகுதி – "ஆ"

5) "ஆன்மாவைப் பந்தித்து இருப்பது பாசங்களாகும்".

i. பாசம் என்பதன் பொருளைக் குறிப்பிட்டு அவற்றின் அடங்கும் விடயங்களை தருக?

ii. ஆணவத்தின் இயல்புகளையும், எண்குணங்களையும் விளக்குக.

iii. கன்மம் மறுபிறப்புக் கோட்பாட்டை விளக்குக.

[4+8+8=20 புள்ளிகள்]

6) திருஞானசம்பந்தர் சைவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குக?

[20 புள்ளிகள்]

7) திருக்கோணேஸ்வர ஆலயத்தின் சிறப்புப்பற்றி ஒரு கட்டுரை வரைக?

[20 புள்ளிகள்]

8) பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

i. நாகதம்பிரான் வழிபாடு

ii. விபுலானந்த அடிகள்

iii. சாங்கியம்

iv. சிவஞானபோதம்

v. இந்து சமய மரபில் மனித நேயம்.

[4 x 5 = 20 புள்ளிகள்]

agaram.lk